
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1075**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## இது பெரியார் மண்

**ர.பிரகாசு**

**43**

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

# தீண்டாமையில் இருந்து விடுபடும் வழி ‘பெரியார்’!

கோவை மாவட்டம், அன்னூர் ஒன்றியத்தில் உள்ள சுற்றுவட்ட கிராமங்களில் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக எண்ணற்ற தீண்டாமைக் கொடுமைகள் நிலவி வந்தன. பொதுக்குழாயில் தாழ்த்தப்பட்ட மக்கள் குடிநீர் பிடிக்க தடை, செல்போன் பேசத் தடை, இரட்டைக்குவளை முறை, சலூன்களில் தாழ்த்தப்பட்டோருக்கு முடிவெட்ட தடை, பொது சுடுகாட்டில் தாழ்த்தப்பட்டோரை புதைக்கத் தடை, மோட்டார் பைக் ஓட்டத் தடை என விதவிதமான தீண்டாமைக் கொடுமைகளுக்கு அப்பகுதி மக்கள் ஆளாகியிருந்தனர்.

2000-க்குப் பிந்தைய நவீன உலகிலும்கூட இத்தகைய சாதியக் கொடுமைகள் தலைவிரித்தாடுவதை சகித்துக்கொள்ள முடியாமல், இவற்றுக்கெதிராகப் போராட வேண்டுமென்ற எண்ணம் அங்குள்ள நல்லிசெட்டிபாளையம் பகுதி இளைஞர்களுக்கு ஏற்பட்டது. ஈஸ்வரன், ஜோதிராம், ராமன் மற்றும் சில இளைஞர்கள் இணைந்து தங்கள்மீது திணிக்கப்படும் சாதிய அநீதிகளைத் துடைத்தெறிய, 2009-இல் பெரியார் திராவிடர் கழகத்தில் தங்களை இணைத்துக்கொண்டனர்.

ஊரின் ஒரு பகுதியில் இடைநிலை சமூகத்தினரும் மற்றொரு பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களும் வசித்து வருகின்றனர். பெரியார் திராவிடர் கழகத்தில் இணைந்து, பிறகு சாதிய அடக்குமுறைகளுக்கு எதிராக மக்களை அணி திரட்டினர். தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதியைப் ‘பெரியார் நகர்’ என்று அழைக்கத் தொடங்கினர். கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர். மூடநம்பிக்கைகளில் இருந்து மக்களை வெளியேற்றி, பகுத்தறிவுச் சிந்தனைகளை வளர்க்கத் தொடங்கினர். சுற்றுப்புறங்களில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதிகளிலும் பகுத்தறிவுச் சிந்தனைகளும், சுயமரியாதை எண்ணமும் வேர்விட்டுப் படரத் தொடங்கியது.



அதன் மாற்றங்கள் அடுத்த இரண்டு ஆண்டுகளிலேயே வெளிப்படத் தொடங்கியது. குறிப்பாக, அன்னூர் ஒன்றியத்தில் நிலவும் தீண்டாமைக் கொடுமைகளைப் பட்டியலெடுத்து, அவற்றை சரிசெய்ய வேண்டுமென்று, 21.05.11 அன்று கோவை ராமகிருஷ்ணன் தலைமையில் அன்னூரில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருந்தது, பெரியார் திராவிடர் கழகம். அதில் குருக்கிளையாம்பாளையம் கிராமத்தில், பொதுக்குழாயில் தண்ணீர் பிடிக்க தீண்டாமைக் கொடுமை நிலவுவதாகச் சுட்டிக்காட்டியிருந்தனர். அதில் குறிப்பிட்டதைப் போலவே, 12.06.2011 அன்று குருக்கிளையாம்பாளையத்தில் பொதுக்குழாயில் குடிநீர் பிடிக்கச் சென்ற வசந்தகுமார் என்ற மாணவனை, அங்கிருந்த ஆதிக்க சாதியினர் சிலர் தடுத்து, தாக்கி அனுப்பினர். அடுத்த ஒரு மணி நேரத்தில், நூற்றுக்கணக்கான பொதுமக்கள் திரண்டு, அன்னூர் - மேட்டுப்பாளையம் சாலையை மறித்தனர்.

காவல் நிலையத்தில் நள்ளிரவு ஒரு மணி வரை போராடி, வன்கொடுமை தடுப்புச்சட்டத்தில் வழக்குப்பதிவு செய்தனர். சுற்றுப்புற கிராமங்கள் அனைத்திலும் நிலவிய தீண்டாமைக் கொடுமைகளைப் பட்டியலெடுத்து பெரியார் திராவிடர் கழகம் சார்பில், மறுநாள் காலையில் கோவை மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு அளித்தனர். அப்போது, புதிதாக அமைந்திருந்த அ.தி.மு.க. அரசு சிறுவனைத் தாக்கியவர்களைக் கைது செய்யவில்லை, தீண்டாமைக் கொடுமைகளைத் தீர்க்கவும் முனையவில்லை.

இதையடுத்து, 27.06.2011, அன்று கொளத்தூர் மணி தலைமையில் ஆயிரம் குடங்களுடன் தண்ணீர் பிடிக்கும் போராட்டத்தில் இறங்கியது, பெரியார் திராவிடர் கழகம். வசந்தகுமாரையும் அவரின் தாயாரையும் அதே குழாயில் தண்ணீர் பிடிக்க வைத்துவிட்டே அங்கிருந்து வெளியேறினார் கொளத்தூர் மணி. ஒட்டுமொத்த தாழ்த்தப்பட்ட மக்களும் அவர்களுக்குப் பின்னால் அணிவகுத்து தண்ணீர் பிடித்தனர். ஒரு நூற்றாண்டு இழிவு, ஒரு நொடியில் துடைத்தெறியப்பட்டது. அதற்கான விதையாக நல்லிசெட்டிபாளையம் பெரியார் நகரில் முளைத்த பகுத்தறிவுச் சிந்தனையும் சுயமரியாதை உணர்வும் இருந்தன.

...பயணிப்போம்.

## ஒரு ரூபாய்க்கு ‘அணில் குஞ்சு’ கதை!




கடந்த ஆண்டு சென்னை புத்தகக் காட்சியில், விஷ்ணுபுரம் சரவணனின் ‘கயிறு’ நூலை ஒரு ரூபாய்க்கு விற்பனை செய்து கவனம் ஈர்த்த சீர் வாசகர் வட்டம், இந்த ஆண்டு மேலும் 2 நூல்களை ஒரு ரூபாய் விலைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

தி.மு.க. இளைஞர் அணி நடத்திய அறிவுத் திருவிழா முற்போக்கு புத்தகக் காட்சியில் உரையாற்றிய கவிஞர் யுகபாரதி, முத்தமிழறிஞர் கலைஞரின் ‘அணில் குஞ்சு’ சிறுகதையை குறிப்பிட்டுப் பேசியது மிகப் பெரிய அளவில் கவனம் ஈர்த்தது. சமூக நீதி மற்றும் மத நல்லிணக்கம் குறித்த ஆழமான கருத்தை விதைத்த இந்தச் சிறுகதையை, ஒரு ரூபாய்க்கு புத்தகக் காட்சியில் விற்பனை செய்வதாக அறிவித்துள்ளது, சீர் வாசகர் வட்டம். மத நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் முயற்சிகள் நாடெங்கும் நஞ்சு போல விதைக்கப்பட்டு வரும் இச்சூழலில், அந்த நஞ்சிலிருந்து தமிழ்நாடு தப்பி பிழைக்கத் தேவையான கருத்துகளை, புனித மேரி பள்ளியில் படிக்கும் ஃபாரூக் என்ற சிறுவனின் கதாபாத்திரம் மூலம் மிக அழகாக இச்சிறுகதையில் தந்திருக்கிறார் கலைஞர். அதை மறுபதிப்பு செய்யும் சீர் வாசகர் வட்டத்தின் முயற்சி பாராட்டத்தக்கது.

அதேபோல, எழுத்தாளர் மு.முருகேஷின் ‘கட்டை விரலின் கதை’ என்ற நூலையும் ஒரு ரூபாய்க்கு விற்பனை செய்வதாக அறிவித்துள்ளது சீர் வாசகர் வட்டம். ஏகலைவன்கள் ஏமாற்றப்பட்டதற்கு, வெட்டப்பட்ட விரலின் குரல் வழியே நியாயம் கேட்டு, சமத்துவத்தின் குரலை உரத்துப் பேசும் இந்தப் படைப்பும் அத்தியாவசியமானது. எண் - F49-இல் இடம்பெற்றுள்ள சீர் வாசகர் வட்ட அரங்கில் இந்நூல்களை வாங்கலாம்.

## ஃப்ளாஷ்பேக்



### பள்ளிச் சிறுவனாகத் தலைவருடன்...



அவினாஷ் ஸ்ரீதர்

2011-ஆம் ஆண்டில், அன்றைய கழகப் பொருளாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள், கும்பகோணம் நகரத்திற்கு கழக நிகழ்ச்சிகளுக்காக வருகை தந்தார். நகரக் கழகத்தின் சார்பில், அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில் என் அப்பாவுடன் சென்று கலந்துகொண்டு, தலைவருக்குப் பொன்னாடை அளித்தேன். 12 வயது பள்ளிச் சிறுவனான எனக்கு மிகுந்த உற்சாகம் அளித்த நிகழ்ச்சி இது. என் அப்பா, குவைத் ப.ஸ்ரீதர், கும்பகோணம் மாநகர கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளராக உள்ளார். அவர் வழியில் நானும் கழக உணர்வோடு செயல்பட்டு வருகிறேன்.

**- அவினாஷ் ஸ்ரீதர்,**
**தனியார் வங்கி ஊழியர், மடிப்பாக்கம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## பொய்ப்பெட்டி

**கோவி.லெனின்**

**93**

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."

# வளர்ச்சிக்கு ஆதாரம் உள்ளது. பொய் மூட்டைக்கு ஆதாரம் உள்ளதா?

**தி.மு.க. அரசு ஊழல் புகாரை ஆளுநரிடம் கொடுத்தேன் என்கிறாரே எடப்பாடி பழனிசாமி... தி.மு.க. ஆட்சி ஊழல் ஆட்சி என்று தமிழ்நாட்டில் பிரச்சாரம் செய்திருக்கிறாரே ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சர் அமித் ஷா?**

இந்த அமித் ஷாவின் வாய்தான் அ.தி.மு.க. ஆட்சி நடந்தபோது, ‘இந்தியாவிலேயே அதிக ஊழல் செய்வது அ.தி.மு.க. ஆட்சிதான்’ என்று குற்றம் சாட்டி பேசியது. அதே அமித் ஷாவும் மோடியும்தான், அதே அ.தி.மு.க. ஆட்சியில் முதல்வராக இருந்த எடப்பாடி பழனிசாமியுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டு, தமிழ்நாட்டில் தோல்வியைத் தழுவினார்கள். எடப்பாடி பழனிசாமி முதல்வராக இருக்கும்போதே தலைமைச் செயலகத்தில் ஒன்றிய அரசின் புலனாய்வு அமைப்புகள் ரெய்டு நடத்தின. பழனிசாமியின் உறவினர்கள், பழனிசாமி அமைச்சரவையின் அமைச்சர்கள் எனப் பலரிடமும் ரெய்டு நடத்தி ஆவணங்களைக் கைப்பற்றி, சி.பி.ஐ-அமலாக்கத்துறை உள்ளிட்ட அமைப்புகள் மூலம் வழக்குகளைப் போட்டு, அதைக் கிடப்பில் வைத்து, இன்று வரை அ.தி.மு.க.வைத் தங்கள் பிடியில் வைத்திருக்கிறார்கள். இதில் தி.மு.க. ஆட்சிமீது எடப்பாடி பழனிசாமி ஆளுநரிடம் புகார் அளிப்பதெல்லாம் சிறுபிள்ளை விளையாட்டுதான்.

தேசிய நெடுஞ்சாலைகள் திட்டம் முதல், பாலங்கள் கட்டுவது, சுரங்கங்களுக்கு அனுமதி வழங்குவது, கனிம வளங்களுக்கான டெண்டர், விமான நிலையங்கள் - துறைமுகங்கள் ஆகியவற்றை தனியாருக்குத் தாரை வார்ப்பது, நிதி மோசடி ஆகியவை வரை அத்தனையிலும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஊழல் முறைகேடுகள் குறித்து, எதிர்க்கட்சிகள் தொடர்ந்து ஆதாரங்களை வெளியிட்டு வருகின்றன. ஆட்சியில் இருப்பதால் மோடியும் அமித் ஷாவும் புனிதர்களாக வேடம் போடுகிறார்கள். அதிகாரம் மாறினால், இவர்கள் மீதும் இதே சி.பி.ஐ., அமலாக்கத்துறை பாயும். இந்த லட்சணத்தில் தி.மு.க. மீது ஊழல் புகார் சுமத்துகிறார் அமித் ஷா.

தி.மு.க. அரசுமீது இன்று நேற்றல்ல, அரை நூற்றாண்டுக் காலமாக சுமத்தப்பட்ட எந்தப் புகாராவது நீதிமன்றத்தில் நிரூபிக்கப் பட்டிருக்கிறதா? இதே பா.ஜ.க.வின் தூண்டுதலால் நாடு முழுவதும் பொய்யாகப் பரப்பப்பட்ட 2-ஜி குற்றச்சாட்டு என்னவானது? பூதாகரமான நம்பரைக் காட்டி மக்களை ஏமாற்றி, தேர்தல் லாபம் பார்த்த பா.ஜ.க., சிறப்பு நீதிமன்றத்தில் உரிய ஆதாரங்களையோ ஆவணங்களையோ சமர்ப்பித்ததா? அரசியல் லாப நோக்கில், மற்ற கட்சிகள்மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டு வைப்பதே பா.ஜ.க.வின் அரசியல் பிழைப்பாக இருக்கிறது. அதுவும் மாநிலக் கட்சிகள் என்றால் ஊழல் ஆட்சி, வாரிசு அரசியல் என்று குற்றம் சாட்டுவது வழக்கம். பா.ஜ.க. அரசின் புதிய அதிகார மையமாக மாறியுள்ள ஜெய் ஷாவின் அப்பாவான அமித் ஷாவெல்லாம் வாரிசு அரசியல் பற்றி பேசுவதைக் கேட்டால் நாட்டு மக்கள் சிரிப்பார்கள்.






இந்தியாவில் தமிழ்நாடு பல்வேறு இலக்குகளிலும் முன்னணியில் இருப்பதை, ஒன்றிய அரசின் துறைகளே ஆதாரங்களோடு வெளியிட்டு வரும் நிலையில், அரசியலுக்காக அமித் ஷா பேசியிருப்பது, எழுதிக்கொடுத்தவரின் அறிவின் அளவையே காட்டுகிறது.

...வினா தொடரும்.

## மலரும் நினைவுகள்

### மகளிர் மன்றத் துவக்க விழா!

1956-ஆம் ஆண்டு நவம்பர் 4-ஆம் தேதி, சென்னை பெத்துநாயக்கன்பேட்டை, டி.டி.வி உயர் நிலைப்பள்ளியில் மகளிர் மன்றத் தொடக்க விழா நடைபெற்றது. வெற்றிச்செல்வி அன்பழகன் வரவேற்புரையாற்ற, டாக்டர் தருமாம்பாள் தலைமை வகிக்க, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், மன்றத்தைத் தொடங்கி வைத்தார். ராணி அண்ணா, சத்தியவாணி முத்து ஆகியோர் உரையாற்றினர். இறுதியாக, அறிஞர் அண்ணா, மகளிர் மன்ற அமைப்பை வரவேற்று, இம்மன்றம் ஆற்ற வேண்டிய கடமைகளை விளக்கினார். 3,000-க்கும் மேற்பட்ட பெண்கள் வருகை தந்தனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131